உங்கள் அபிமான தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 25.05.2026 • மலர் 04 • இதழ்: 145 • Edition : Nagercoil • 25.05.2026 • Vol : 04 • Issue : 145 • Page : 4 • Rs. 5/-

### கோவை சிறுமி கொலை சம்பவம்:

# பெற்றோர்களுக்கு முதல்வர் போனில் ஆறுதல்

## ரூ.7 லட்சம் நிதியுதவி அளிப்பு

மேட்டூர், மே. 25

கோவையில் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகி கொலை செய்யப்பட்ட சிறுமியின் குடும்பத்தினரிடம் தொலைபேசி மூலம் பேசி தமிழக முதல்வர் விஜய் ஆறுதல் தெரிவித்தார்.

கோவை மாவட்டம் சூலூர்அருகே10வயது சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக 2 பேரை போலீஸார் கைது செய்தனர். கோவை அரசு மருத்துவமனையில் சிறுமியின் உடல் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு, சொந்த ஊரான மேட்டூர் அருகே கொளத்தூர் உக்கம்பருத்தி காடு கிராமத்தில் உள்ள மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்நிலையில் போக்குவரத்துத்துறை அமைச்சர் தமிழன் பார்த்திபன் மற்றும் பிற்படுத்தபட்டோர் நலத்துறை அமைச்சர் சம்பத்குமார் ஆகியோர் சிறுமியின் பெற்றோரை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தனர்.

தொடர்ந்து, சிறுமியின் குடும்பத்தினருக்கு ரூ 7 லட்சத்துக்கான காசோலையை வழங்கினர். சிறுமியின் பெற்றோர் மற்றும் பாட்டியை வீட்டின் உள்ளறைக்கு அழைத்துச் சென்று பேசினர். அப்போது, தமிழக முதல்வர் விஜய் சிறுமியின் தந்தை மற்றும் பாட்டியிடம் தொலைபேசி மூலமாக பேசி ஆறுதல் தெரிவித்தார். அப்போது, மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், மாவட்ட எஸ்.பி கவுதம் கோயல் உடனிருந்தனர்.

சிறுமியின் தந்தை மற்றும் பாட்டி நிருபர்களிடம் கூறியதாவது: “இந்தசம்பவம்குறித்து கேட்டதும் மிகுந்த அதிர்ச்சியடைந்தேன். சிறுமியை கொலை செய்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க போலீஸாரிடம் தெரிவித்துள்ளேன். உங்களுக்கு வீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்” என்று முதல்வர் விஜய் தெரிவித்ததாக கூறினர்.

பின்னர், போக்குவரத்துறை அமைச்சர் நிருபர்களிடம் கூறியதாவது: இது மிகப்பெரிய இழப்பு.



இதுதொடர்பாகமுதல்வர் வருத்தத்தையும், அறிக்கையும் வெளியிட்டுள்ளார். இது போன்ற எந்த ஒரு சம்பவமும் இனி தமிழ்நாட்டில் நடக்கக் கூடாது என இரண்டு பேரை போலீசார் கைது செய்துள்ளனர். வழக்கு விரைந்து முடித்து கடுமையான தண்டனை வழங்கப்படும். பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு பொது நிவாரண நிதியின் கீழ் ரூ 7 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. என்றார்.

மத்திய மாநில அமைச்சர்கள் நேருக்கு நேர் சந்திப்பு: கோவையில் உயிரிழந்த சிறுமியின் குடும்பத்தினரை சந்தித்து பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் மற்றும் மத்திய

இணை அமைச்சர் எல்.முருகன் ஆகியோர் ஆறுதல் தெரிவித்து விட்டு வந்தனர். அப்போது, அமைச்சர்கள் தமிழன் பார்த்திபன் மற்றும் சம்பத்குமார் வெளியே காத்திருந்தனர்.

பின்னர், பாஜகதலைவர் மற்றும் மத்திய அமைச்சர் வெளியே வரும் போது தமிழக அமைச்சர்களை நேருக்கு நேராக சந்தித்து பேசி கொண்டனர். அப்போது, தமிழக அமைச்சர்கள் தங்களை அறிமுகப்படுத்தி கொண்டு, கட்சி நிர்வாகிகளையும் அறிமுகப்படுத்தினர். தொடர்ந்து, சிறுமியின் குடும்பத்தினருக்கு வீடு இல்லை, அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர். அதற்கு, நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் தமிழன் பார்த்திபன் தெரிவித்தார்.

# அறிவிக்கப்படாத மின்வெட்டு... தமிழக அரசுக்கு அன்புமணி ராமதாஸ் கோரிக்கை

சென்னை, மே. 25

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டில் சென்னை உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களிலும் கடந்த சில நாள்களாக அறிவிக்கப்படாத மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் தமிழக மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மின்வெட்டுக்கான காரணங்கள் குறித்து அரசுத் தரப்பில் கூறப்படும் காரணங்களை ஏற்க முடியாது.

தமிழ்நாட்டில் கோடை வெப்பம் சுட்டெரிக்கத் தொடங்கியுள்ள நிலையில், மின் தேவையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அதிகரித்து வரும் மின் தேவையை பூர்த்தி செய்வது பெரும் சவாலாக உருவெடுத்துள்ள நிலையில், மாநிலத்தின் பல பகுதிகளில் அடிக்கடி அறிவிக்கப்படாத மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதனால் பாதிக்கப்படும் மக்கள் மின்வாரிய அலுவலகங்களை முற்றுகையிட்டு போராட்டம் நடத்துவது அன்றாட நிகழ்வுகளாகி வருகின்றன.

ஆனால், தமிழகத்தில் எங்கும் மின்வெட்டு இல்லை என்றும், சில தனி மனிதர்கள் செய்யும் சதியாலும், மின் கருவிகளின் பழுதாலும் தான் மின்தடை ஏற்படுவதாகதமிழகஅரசு விளக்கம் அளித்திருக்கிறது. எத்தனைத் தடைகள் ஏற்படுத்தப்பட்டாலும், அவற்றைக் கடந்து மக்களுக்கு தடையற்ற மின்சாரம் வழங்க வேண்டியது அரசின் கடமை ஆகும். எனவே, காரணங்களைக் கூறுவதை விடுத்து மின்வெட்டை முற்றிலுமாகத் தடுக்க தமிழ்நாடு மின்சார வாரியம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழகத்தின் மின்தேவை அதிகரித்தால், அதை சமாளிக்க முடியாத நிலை இருப்பதை மின்சார வாரியம் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்கள் உறுதி செய்திருக்கின்றன. மின்சாரவாரியத்தின்சொந்த மின்னுற்பத்தி நிலையங்கள், மத்திய மின்தொகுப்புகள், தனியார் மின் நிலையங்கள் உள்ளிட்ட அனைத்து ஆதாரங்களில் இருந்தும் மின்சார வாரியத்திற்கு கிடைக்க வாய்ப்புள்ள மின்சாரத்தின் அளவு 21,393 மெகாவாட் மட்டுமே. இயல்பான சூழலில் இதில் 90% அளவுக்கு மட்டுமே மின்னுற்பத்தி செய்ய முடியும். நேற்று முன்நாள் 22&ஆம் தேதி மாலை நிலவரப்படி, 89.40%, அதாவது 19,126 மெகாவாட் மின்சார உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது.



கடந்த ஏப்ரல் 29ஆம் தேதி மாலை தமிழகத்தின் மின் தேவை 21,307 மெகாவாட்டாக உயர்ந்தது. இது தமிழ்நாடு மின்சார வாரியத்தின் அனைத்து ஆதாரங்களின் ஒட்டுமொத்த மின்னுற்பத்தித் திறனில் 99.60% ஆகும். இந்தத் தேவையை அரும்பாடுபட்டு தான் மின்வாரியம் சமாளித்தது. நடப்பாண்டின் எஞ்சியுள்ள கோடைக்காலத்தில் காற்றாலை மின்சாரம் கை கொடுக்காவிட்டால், தமிழகத்தின் மின்தேவை அதிகரிக்கும் சூழலில் அதை சமாளிக்க முடியாத நிலை ஏற்படும். இனி வரும் ஆண்டுகளில் மின்தேவை மேலும், மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், அதை எதிர்கொள்ள உற்பத்தித் திறன் அதிகரிக்கப்பட வேண்டும்.

திமுக ஆட்சி கடந்த 2021ஆம் ஆண்டு பொறுப்பேற்ற போது மொத்தம் 5700 மெகாவாட் திறன் கொண்ட அனல்மின் திட்டங்களை அமைக்கும் பணிகள் பல்வேறு நிலைகளில் இருந்தன. திமுக அரசு நினைத்திருந்தால், அனைத்து மின் திட்டப் பணிகளையும் நிறைவேற்றி முடித்து உற்பத்தியைத் தொடங்கியிருக்க முடியும். ஆனால், அதிமுக ஆட்சியில் 90% பணிகள் முடிவடைந்திருந்த வடசென்னை மூன்றாவது அனல் மின்நிலையத்தில் மட்டும் தான் கடந்த பிப்ரவரி , மார்ச் மாதத்தில் வணிகரீதியான மின்னுற்பத்தியைத் தொடங்கியது. மீதமுள்ள 4,900 மெகாவாட் திறன் கொண்ட மின்னுற்பத்தி நிலையப் பணிகள் இன்று வரை நிறைவடை யவில்லை. 1. உடன்குடியில் தலா 660 மெகாவாட் மின்னுற்பத்தி திறன் கொண்ட நிலையங்களை அமைக்க 2012ஆம் ஆண்டில் ஒப்பந்தம் அளிக்கப்பட்டது. 2017ஆம் ஆண்டில் அதன் பணிகள் முடிந்திருக்க வேண்டும். ஆனால், அந்த ஆண்டில்தான் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு, கடந்த பிப்ரவரி மாதத்தில் தான் முதல் அலகில் சோதனை அடிப்படையில் மின்னுற்பத்தித் தொடங்கப்பட்டுள்ளது.

2. உப்பூரில் தலா 800 மெகாவாட் திறன் கொண்ட இரு நிலையங்கள் கடந்த 2011ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டன. 2017ஆம் ஆண்டில் அவற்றில் உற்பத்தி தொடங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இதுவரை கட்டுமானப் பணிகள் தொடங்கப்படவில்லை. இப்போது இந்தத் திட்டத்தை உடன்குடிக்கு மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

3. எண்ணூரில் 660 மெகாவாட் திறன் கொண்ட மாற்று அனல் மின் நிலையம் 2012ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது. 2018ஆம் ஆண்டில் உற்பத்தி தொடங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இன்னும் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படவில்லை.

4. எண்ணூர் சிறப்புப் பொருளாதார மணடலத் திட்டம் என்ற பெயரில் தலா 660 மெகாவாட் திறன் கொண்ட இரு நிலையங்கள் அமைக்கும் பணிகள் பத்தாண்டுகளுக்கு முன் முடிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இப்போது தான் இதில் 73% பணிகள் நிறைவடைந்துள்ளன.

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியும், பொருளாதார வளர்ச்சியும் எட்டப்பட வேண்டும் என்றால், மின்னுற்பத்தியில் தன்னிறைவு அடைய வேண்டும். கடந்த ஆட்சியில் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத நிலையில், புதிய அரசு இதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். தமிழ்நாட்டில் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் அனல் மின் திட்டங்களின் தற்போதைய நிலை என்ன? அவை எப்போது உற்பத்தியைத் தொடங்கும்? புதிதாக என்னென்ன மின் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன? கார்பன் சமநிலையை அடைவதற்காக தமிழ்நாட்டில் எப்போது அனல் மின் உற்பத்தியை முடிவுக்குக் கொண்டு வர இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பன உள்ளிட்ட விவரங்கள் அடங்கிய வெள்ளை அறிக்கையை தமிழக அரசு வெளியிட வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

# பா.ஜ.க.வுடன் சேர்ந்து வெகுவிரைவில் தி.மு.க., அ.தி.மு.க. கூட்டணி அமைக்கும்: மாணிக்கம் தாகூர் எம்.பி. பரபரப்பு பேட்டி

சிவகாசி மே. 25

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில், விஜயின் தமிழக வெற்றிக்கழகம் 108 இடங்களில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது. தி.மு.க. கூட்டணி 73 இடங்களையும், அ.தி.மு.க. கூட்டணி 53 இடங்களையும் கைப்பற்றின. இதனால், தமிழகத்தில் ஆட்சியமைப்பதற்கு தேவையான முயற்சியில் தமிழக வெற்றிக்கழகம் ஈடுபட்டது.

118 எம்.எல்.ஏ.க்கள் என்ற பெரும்பான்மை இல்லாத சூழலில், த.வெ.க. சார்பில் பல்வேறு கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அதன் பயனாக காங்கிரஸ், வி.சி.க., இந்திய கம்யூனிஸ்டு (சி.பி.ஐ.), மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு (சி.பி.எம்.), இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளிடம் தனித்தனியே பேச்சுவார்த்தை நடந்தது. அக்கட்சிகளின் முழு ஆதரவுடன் த.வெ.க. ஆட்சியமைத்து விஜய் முதல்அமைச்சராகி உள்ளார்.

எனினும், தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் கூட்டணியாக அதிக இடங்களை கைப்பற்றி இருந்த சூழலில் அந்த இரு கட்சிகளும் இணைந்து ஆட்சியமைக்க கூடிய சாதகமும் இருந்தது. அதற்கான மறைமுக பேச்சுவார்த்தை நடந்தது என தகவல் வெளியானது. ஆனால், இதனை தி.மு.க. நிராகரித்தது. அ.தி.மு.க. எதுவும் கூறாமல் இருந்து விட்டது.

இந்த நிலையில், காங்கிரஸ் கட்சியை சேர்ந்த எம்.பி., மாணிக்கம் தாகூர் பரபரப்பு பேட்டியளித்து உள்ளார். அவர், மே 4ல் என்ன நடந்தது? என்பது பற்றி சிவகாசியில் செய்தியாளர்களிடம் கூறும்போது, தி.மு.க.வும், அ.தி.மு.க.வும், கூட்டணி அமைக்க பா.ஜ.க. கனெக்டிங் கால் போட்டது. பா.ஜ.க.வின் ஆணைக்கிணங்க தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் இணைந்து ஆட்சியமைக்க முயன்றன. அதில், இரு கட்சிகளும் உறுதியாக இருந்தன. பா.ஜ.க.வின் முயற்சிக்கு கவர்னர் மறைமுக ஒத்துழைப்பு வழங்கினார்.

இந்த தி.மு.க.அ.தி.மு.க. கூட்டணி முயற்சி பற்றி முதலில் கம்யூனிஸ்டு கட்சியின் (எம்) தேசிய பொதுச்செயலாளர் பேபி வெளியே கூறினார். பின்னர், வி.சி.க. தலைவர் திருமாவளவன், சி.வி. சண்முகம் ஆகியோரும் இதனை கூறினார்கள். தமிழகத்தில் நேரடியாகவோ, மறைமுக அடிப்படையிலோ பா.ஜ.க. வரக்கூடாது என்பதற்காக எல்லா தியாகங்களையும் நாங்கள் செய்வோம் என்று கூறினார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை முதல்அமைச்சர் ஆக்கி விட்டு வெளியே இருந்து ஆதரவு தரதிமு.க. முன்வந்தது. இதனை வெளியே கூறினால் தப்பாகி விடும் என்றுதான் இவ்வளவு நாட்களாக அமைதியாக இருந்தோம். வெகுவிரைவில் பா.ஜ.க.வுடன் சேர்ந்து தி.மு.க., அ.தி.மு.க. கூட்டணி அமைக்கும் என்று கூறியுள்ளார்.

தி.மு.க.வை உற்சாகப்படுத்தவே த.வெ.க. ஆட்சி 5 ஆண்டுகள் நீடிக்காது என தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் பேசி வருகிறார்.

சட்டசபை தேர்தல் தோல்விக்கு காரணம் காங்கிரஸ் என தி.மு.க. கூறுகிறது. தோல்வி அடைந்ததும் தி.மு.க. பேசும் பேச்சு இதுதான் என்றும் கூறினார்.

# மேக்கேதாட்டு அணைத் திட்டத்தை விஜய் கடுமையாக எதிர்க்க வேண்டும்: சீமான்

சென்னை

“மேகேதாட்டு திட்டத்தை எதிர்க்க தமிழ்நாட்டுக்கு எந்த உரிமையும் இல்லை எனப் பேசியிருக்கும் கர்நாடக துணை முதல்வர் டி.கே.சிவகுமாரின் பேச்சை முதல்வர் விஜய் கண்டித்து, மேகேதாட்டுவில் அணை கட்டும் கர்நாடக அரசின் முயற்சிக்கு தமிழ்நாட்டு அரசின் சார்பாக எதிர்ப்பினைத் தெரிவிக்க வேண்டும்” என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தியுள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், ‘காவிரியாற்றின் குறுக்கே மேகேதாட்டுவில் அணைகட்டும் கர்நாடக அரசின் திட்டத்தை எதிர்க்க தமிழ்நாட்டுக்கு எந்த உரிமையும் இல்லை எனப் பேசியிருக்கும் கர்நாடக துணை முதல்வர் டி.கே.சிவகுமாரின் பேச்சு அடாவடித்தனத்தின் உச்சம்; காவிரி நதிநீர் உரிமையை முழுமையாகத் தங்களுக்கென சொந்தமாக்கத் துடிக்கும் மோசடித்தனத்தின் வெளிப்பாடு.

கன்னடம் எனும் மொழி பிறப்பதற்கும், கர்நாடகா எனும் மாநிலம் பிறப்பதற்கும் முன்பிருந்தே, காவிரிக்கும், தமிழ்நாட்டுக்கும் வரலாற்றுவழி உயிர்த்தொடர்பு இருக்கிறது. அதனை முற்றாக அறுத்து, உலக நதிநீர் பங்கீட்டு விதிகளுக்கு நேர்மாறாக, காவிரி நதிநீர் உரிமையை கர்நாடகத்துக்கு மட்டுமானதாக உரிமை கொண்டாடத் துடிக்கும் சூழ்ச்சியின் வெளிப்பாடே மேகதாட்டுவில் அணைகட்டும் வஞ்சகச் செயல். அதனை தமிழர்கள் நாங்கள் தட்டிக் கேட்காது, வேறு யார் கேட்பார்? காவிரியில் தமிழர்கள் எங்களுக்கில்லாத உரிமை வேறு யாருக்கு இருக்கிறது?

காவிரி நதிநீர் உரிமை என்ன கர்நாடகத்துக்கு மட்டுமான சொத்தா? ஒரு ஆற்றின் தலைப்பகுதியில் வாழ்பவர்களைவிட கடைமடைப் பகுதியில் வாழ்பவர்களுக்கே ஆற்றின் மீது அதிக உரிமை எனும் நதிநீர் பங்கீட்டு விதிகளின்படி, காவிரியின் மீது கர்நாடகத்தைவிட தமிழ்நாட்டுக்குத்தான் அதிக உரிமை இருக்கிறது. அப்படியிருக்கையில், டி.கே.சிவகுமாரின் பேச்சுஆணவத்தின்வெளிப்பாடு.அதனை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

ஆகவே, கர்நாடக துணை முதல்வர் டி.கே.சிவகுமாரின் ஆணவப்பேச்சை முதல்வர் விஜய் கண்டித்து, மேகதாதுவில் அணை கட்டும் கர்நாடக அரசின் முயற்சிக்கு தமிழ்நாட்டு அரசின் சார்பாக எதிர்ப்பினைத் தெரிவிக்க வேண்டுமென வலியுறுத்துகிறேன்.’ எனத் தெரிவித்துள்ளார்.

# கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் ஆய்வு



கிருஷ்ணகிரி, மே. 25

தமிழ்நாடு முதலமைச்சர். ச ஜோசப் விஜய் ஆணைக்கிணங்க நமது கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதியின் உறுப்பினர் .P. முகுந்தன் மற்றும் கிருஷ்ணகிரி மத்திய மாவட்ட நகர கழக செயலாளர் .M. சசிகுமார் மேற்பார்வையில் நேற்று இரவு 11 மணி அளவில் கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையத்தில் கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் திடீர் ஆய்வு மேற்கொண்டார்

# கடலாடி வட்டார விவசாயிகள் வேளாண் திட்டங்கள் பயன்பெற விவசாய அடையாள அட்டை மிக அவசியம்

முதுகுளத்தூர் மே.25

தோட்டக்கலை உதவி இயக்குனர் அறிவுறுத்தல் பேரில் கடலாடி வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் சி. பாண்டியம்மாள் கூறியதாவது:

மத்திய மாநில அரசுகளின் வேளாண் நலத்திட்டங்களை உடனுக்குடன் பெற விவசாயிகள் அனைவரும் விவசாய அடையாள என் பெற்றுக் கொள்ள வேண்டும். வேளாண்துறை தோட்டக் கலைத்துறை மற்றும் பிற அரசுத் துறைகளின் மூலம் ஒதுக்கப்படும் மானியங்கள் இடுபொருட்கள் மற்றும் பி.எம். கிசான் போன்ற நிதி உதவி பெறும் திட்டங்களை முழுமையாக பயன்படுத்த இந்த விவசாய அடையாள எண் மிக முக்கியமானது.

இந்த விவசாய அட்டைகளின் எண் இருந்தால் மட்டுமே வருங்காலங்களில் அரசு வழங்கும் விவசாய கடன்,, பயிர் காப் பீட்டுத் தொகை, விதைகள், உரங்கள் போன்ற சலுகைகளை தங்கு தடையின்றி பெற முடியும், கடலாடி வட்டாரத்திற்கு உட்பட்ட பல்வேறு கிராமங்களில் இதற்காக சிறப்பு முகாம்கள் கூட்டப்பட்டு வருகின்றன. அல்லது அருகிலுள்ள இசேவை மையங்களுக்கு சென்றும் எளிதாக பதிவு செய்து கொள்ளலாம். அனைத்து குரு நேரடி பட்டாதாரர் விவசாயிகளும் இந்த மாதம் 30.05.20262 விவசாய அடையாள அட்டைபதிவு செய்யுமாறுகேட்டுக்கொள்ளப்படுகிறது



கிருஷ்ணகிரி மாவட்ட சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் பி.முகந்தன் புதிய மருத்துவமனைலைப்கேர்மல்டிஸ்பெஷயாலிட்டிமருத்துவமனைதிறப்புவிழாவில்திறப்பு சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார்

## கன்னியாகுமரியில்

# 2 கிலோ கஞ்சா வுடன் 2 வாலிபர்கள் கைது



கன்னியாகுமரி, மே. 25

குமரி மாவட்டத்தில் இளைஞர்கள் மற்றும் மாணவர்களை போதைப்பொருள் பழக்கத்திலிருந்து பாதுகாக்கும் நோக்கில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் உத்தரவின்பேரில் காவல்துறையினர் மாவட்டம் முழுவதும் தீவிர கண்காணிப்பு மற்றும் தொடர் அதிரடி சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர். அரசால் தடை செய்யப்பட்ட போதைப்பொருட்களின் விற்பனை மற்றும் கடத்தலை முற்றிலும் தடுக்க "போதை இல்லா குமரி" என்ற இலக்குடன் காவல்துறை செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில் கன்னியாகுமரி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கஞ்சா விற்பனை நடைபெறுவதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் போலீசார் அந்த பகுதியில் திடீர் சோதனையில் ஈடுபட்டனர். அப்போது சந்தேகத்திற்கிடமாக நின்ற 2 பேரை பிடித்து விசாரணை மேற்கொண்டதில், ஒருவர் பாளையங்கோட்டை அண்ணா நகர் பகுதியை சேர்ந்த சுதன் (28) மற்றும் சமாதானபுரம் பகுதியை சேர்ந்த அபினேஷ் (24) ஆகியோர் என்பது தெரிந்தது. மேலும் அவர்கள் விற்பனைக்காக கஞ்சா பதுக்கி வைத்திருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது.

தொடர்ந்து போலீசார் அவர்களிடமிருந்து சுமார் 2 கிலோ அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சா மற்றும் விற்பனைக்கு பயன்படுத்தப்பட்ட இருசக்கர வாகனம் பறிமுதல் செய்தனர். யப்பட்டது.

இருவர்மீதும் கன்னியாகுமரி போலீசார் வழக்குப்பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி கைது செய்தனர்.

போதைப்பொருள் விற்பனை மற்றும் பயன்பாட்டில் ஈடுபடுபவர்கள் மீது எந்தவித தயக்கமும் இன்றி கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், பொதுமக்கள் சந்தேகத்திற்கிடமானதகவல்களைஉடனடியாக காவல்துறைக்கு தெரிவிக்க வேண்டும் என்றும் காவல்துறை கேட்டுக்கொண்டுள்ளது.

## அகஸ்தீஸ்வரம்

# கீழச்சாலை பெரியசுவாமி திருக்கோவில் கொடைவிழா இன்று தொடங்குகிறது



தென்தாமரைகுளம்., மே. 25

அகஸ்தீஸ்வரம். கீழச் சாலை, பெரியசாமி கோவில் தெருவில் அமைந்துள்ள பெரியசாமி திருக்கோவில் கொடைவிழா இன்று 25ம்தேதி திங்கள் கிழமை தொடங்கி 27 ம்தேதி புதன்கிழமை வரை 3 நாட்கள் நடக்கிறது. முதல் நாள் விழாவான இன்று 25ம்தேதி திங்கள்கிழமை காலை 6மணிக்கு கணபதி ஹோமம்,நண்பகல் 12 மணிக்கு தீபாராதனை,மாலை 6 மணிக்கு திருவிளக்கு பூஜை,இரவு 7.30 மணிக்கு சமய சொற்பொழிவு, 8.30 மணிக்கு பஜனை 9 மணிக்கு நையாண்டி மேளம், 9.30 மணிக்கு வில்லிசை (சாமி, சாஸ்தா வரலாறு) 9.45 மணிக்கு விநாயகருக்கு தீபாராதனை,10.மணிக்குஅம்மாள்சுவாமிக்குதீபாராதனை நள்ளிரவு 12 மணிக்கு சாமி சாஸ்தாவுக்கு அலங்கார தீபாராதனை, 12.30மணிக்கு பத்திரகாளி அம்மனுக்கு அலங்கார தீபாராதனையும் நடக்கிறது.

இரண்டாம் நாள் விழாவான 26ம் தேதி நளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு நையாண்டி மேளம், 9 மணிக்கு வில்லிசை ( மார்க்கண்டேயன் வரலாறு),பகல் 11மணிக்கு சங்கிலிபூதம் சுவாமிக்கு அலங்காரதீபாராதனை, நண்பகல் 12 மணிக்கு காலன், செங்கிடாக்கார சுவாமிகளுக்கு அலங்கார தீபாராதனை, 12.15 மணிக்கு காலசுவாமி மஞ்சள் நீராடுதல், 12.30 மணிக்கு சமபந்தி விருந்து, இரவு 8 மணிக்குகச்சேரி மேளம், 8.30 மணிக்கு வில்லிசை, 10.30 மணிக்கு மாலையம்மை சுவாமிக்கு அலங்கார ீபாராதனை,நள்ளிரவு 12.30 மணிக்கு பெரியசுவாமிக்கு விசேஷ அலங்கார தீபாராதனையும் நடக்கிறது.

மூன்றாம் நாள் விழாவான 27ம்தேதி புதன்கிழமை அதிகாலை 1 மணிக்கு நீலன், நீலி (இசக்கி அம்மன்) சுவாமிகளுக்கு அலங்கார ீபாராதனையும்,காலை 9 மணிக்கு மகுடக்கச்சேரி மற்றும் சிறப்பு நடனம்,பகல் 11 மணிக்கு சுடலைமாட சுவாமிக்கு அலங்கார தீபாராதனை,மதியம் 12.30 மணிக்கு சமபந்தி விருந்தும் நடக்கிறது.விழா ஏற்பாடுகளை அறங்காவலர்கள் செய்துவருகின்றனர்.

## தென் தாமரைகுளம் அருகே

# லோடு ஆட்டோ டிரைவர் விஷம் குடித்து தற்கொலை

தென்தாமரைகுளம், மே. 25

தென்தாமரைகுளம்அருகேஉள்ளதேரிவிளையை சேர்ந்தவர் மணிகண்ட ராஜன் வயது 37, இவருக்கு கடந்த 14 வருடங்களுக்கு முன்பு திருமணம் ஆகி மனைவி ஜெயந்தியுடன் வசித்து வந்துள்ளார். மணிகண்ட ராஜன் லோடு ஆட்டோ (குட்டி யானை) ஓட்டி பிழைப்பை நடத்தி ஞ்சஆவந்துள்ளார்.இவர் வங்கியில் கடன் வாங்கி வீடு கட்டியதாகவும் மேலும் லோடு ஆட்டோவும் ( குட்டி யானை) வங்கி கடனில் வாங்கிவுள்ளார். இதனால் கடன்கள் அதிகமாக இருந்துள்ளது இதனால் மணிகண்டராஜன் மிகுந்த மன அழுத்தத்தில் இருந்து வந்ததாக கூறப்படுகிறது. இந்நிலையில் சம்பவத்தன்று மாலை வீட்டிலிருந்த பூச்சிக்கொ ல்லி மருந்தை எடுத்து குடித்துள்ளார். இதைப் பார்த்தவர்கள் அவரைமீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்துள்ளனர். அங்கு தீவிர சிகிச்சையில் இருந்த மணிகண்டராஜன் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார். இது குறித்து அவரது மனைவி தென்தாமரை குளம் காவல் நிலையத்தில் அளித்த புகாரின்படி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## தென் தாமரைகுளம் அருகே

# தனியார் நிதி நிறுவன மேலாளருக்கு கொலை மிரட்டல்

தென்தாமரைகுளம், மே 25

தென் தாமரைகுளம் அருகே உள்ள அண்டிவிளை பகுதியை சேர்ந்தவர் அரவிந்த் (வயது 37). இவர் ஒருதனியார்நிதி நிறுவனத்தில் மேலாளராக பணியாற்றி வருகிறார். இவருக்கு சொந்தமான வீட்டில் உறவினரான பாலகிருஷ்ணன் என்பவர் கடந்த நான்கு வருடங்களுக்கு முன்பு வெளிநாட்டில் வேலைக்கு செல்லும் போது இரண்டு வருடத்தில் திரும்பவந்து விடுவேன் என கூறி அவரது மனைவி மற்றும் குழந்தைகளை தங்கவைத்து விட்டு சென்றதாக கூறப்படுகிறது. பாலகிருஷ்ணன் உறவினர் என்பதால் அவரது குடும்பத்தை அந்த வீட் டில் தங்க சம்மதித்துள்ளார் அரவிந்த் . இந்தநிலையில் அரவிந்தின் சொந்த பயன்பாட்டிற்காக வீட்டை திரும்ப கேட்டுள்ளார். இதில் ஆத்திரமடைந்த பாலகிருஷ்ணன் வெளிநாட்டில் இருந்து செல்போனில் அரவிந்தை தொடர்பு கொண்டு ஆபாசமாக திட்டியுள்ளார். மேலும் கொலை மிரட்டலும் விடுத்துள்ளார். இது குறித்து அரவிந்த் தென்தாமரைகுளம் காவல்நிலையத்தில் புகாரளித்தார். அதன் பேரில் பாலகிருஷ்ணன் மற்றும் அவரது தந்தை அய்யாதுரை ஆகிய 2 பேர் மீது போலிசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.



# பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் ஆய்வு

நாகர்கோவில், மே.25

கன்னியாகுமரி மாவட்டத்தில் பருவ மழை தற்போது தொடங்கியுள்ள நிலையில் முக்கிய நீர் ஆதாரமாக விளங்கும் பேச்சிப்பாறை அணையின் தற்போதைய நீர்மட்டம் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர்அழகுமீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் கூறியதாவது:

தென்மேற்கு பருவமழை தொடங்கியுள்ளதைத்தொடர்ந்து, அணையின் மதகுகளின் செயல்பாடுகளைதுல்லியமாக கண்காணிக்குமாறு துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. பேச்சிப்பாறை அணையின் கொள்ளளவு 48 அடியாகும். தற்போது 22.03 அடி அளவு நீர் நிரம்பியுள்ளது. பொதுமக்கள் மற்றும் விவசாயிகளின் தேவைகளை உணர்ந்து, நீர் இருப்பு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மேலும் தொடர்ந்து மழை பொழியும் போது நீர் வரத்து அதிகரிக்கும். இதனால் அதிகளவு உபரி நீர் வெளியேற்றப்படும் சூழ்நிலை ஏற்படின் அணையின் மதகு பாதுகாப்பு தன்மை, பொதுமக்கள் மற்றும் விவசாய நிலங்கள், நீர் வழித்தடங்கள் பாதிப்படையாமல் இருப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து அணையின் நீர் வரத்து அளவினை அவ்வப்போது கண்காணித்திட நீர்வளத்துறை அலுவலர்கள், பணியளார்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. என கலெக்டர் கூறினார். அவருடன் நீர்வளத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# கடையால் பேரூராட்சி பகுதிகளில் வளர்ச்சி திட்டப்பணிகள்: கலெக்டர் ஆய்வு

நாகர்கோவில், மே.25

கன்னியாகுமரி மாவட்டத்தில் தொல்குடி திட்டத்தின்கீழ் கடையால் பேரூராட்சிக்குட்பட்ட புரையிடம் பகுதியில் 7 வீடுகளும், பெருங்குருவி பகுதியில் 4 வீடுகளும், செறுகிடத்துக்காணி பகுதியில் 11 வீடுகள் 22 பழங்குடியினர் பயனாளிகளுக்கு தலா ரூ.5,73,000 வீதம் ரூ.1.26 கோடி மதிப்பில் நிதி ஒதுக்கீடு செய்து, வீடுகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் கடையால் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் கட்டப்பட்டு வரும் வீடுகளின் அஸ்திவார பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா, நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும், கட்டுமானப் பணிகளின் தரம் மற்றும் தற்போதைய நிலை குறித்து துறை அலுவலர்களிடம் கேட்டறிந்தார். நடைபெற்று வரும் பணிகளை எவ்வித தொய்வுமின்றி, விரைந்து முடித்திட துறை அலுவலர்களை அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து மோதிரமலை பகுதியில் சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.45 இலட்சம் மதிப்பில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டப்பட்டுவருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். 95 சதவீதம் நிறைவடைந்துள்ள பணிகளை விரைந்து முடித்து பழங்குடி மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்ப ட்டது. நடைபெற்ற ஆய்வில் கடையால் பேரூராட்சி செயல் அலுவலர் ஜோஸ்லின் ராஜ், கடையால் பேரூராட்சி இளநிலை பொறியாளர் பாரத்ராஜ், துறை அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

## நாகர்கோவில் ரேஷன் அரிசி கடத்தல் விவகாரம்

# அதிகாரிகள் 2 பேர் சஸ்பெண்ட்

நாகர்கோவில், மே. 25

நாகர்கோவிலை அடுத்த கோவில் விளையில் உள்ள ஒரு தென்னந்தோப்பில் பதுக்கப்பட்டு இருந்த சுமார் 5 டன் ரேஷன் அரிசி, கோதுமை மூடைகளை குமரி மாவட்ட உணவு கடத்தல் தடுப்பு பிரிவு போலீசார் கடந்த வாரம் கைப்பற்றினார். இவை அனைத்தும் நுகர் பொருள் வாணிப கழக குடோன்களில் இருந்து ரேஷன் கடைக்கு அனுப்பி வைக்கப்பட்ட மூடைகள் ஆகும். இது தொடர்பாக விசாரணை நடத்தி நாகர்கோவில் இருளப்பபுரம் பகுதியை சேர்ந்த வியாபாரிகள் சகாதேவன் (52), சரலூர் பகுதியை சேர்ந்த ஜெயக்குமார் (45), மூவேந்தர் நகரை சேர்ந்த மோகன் (54) ஆகிய 3 பேரை உணவு கடத்தல் தடுப்பு பிரிவு போலீசார் கைது செய்தனர்.

இவர்களிடம் நடந்த விசாரணையில் நாகர்கோவில் கோணத்தில் உள்ள தமிழ்நாடு அரசின் நுகர்வோர் வாணிப கழக குடோனில் பணியாற்றிய இரண்டு முக்கிய அதிகாரிகளுக்கு தொடர்பு இருப்பது தெரிய வந்தது. விசாரணை நடத்திய போலீசார் நேற்று முன்தினம் ஜூனியர் குவாலிட்டி ஆய்வாளர் ரமேஷ், ஜூனியர் அசிஸ்டன்ட் (பாயின்ட் கிளார்க்) செந்தில் குமார் ஆகிய 2 பேரை கைது செய்தனர். இதே போல் நேற்று நுகர்வோர் வாணிப கழக குடோன் காவலாளிகளில் ஒருவரான பாபு என்பவரையும் கைது செய்தனர்.

இதுவரை இந்த சம்பவத்தில் 3 வியாபாரிகள், நுகர்வோர் கழக குடோனின் பணியற்றும் 2 அதிகாரிகள், ஒரு காவலர் என ஆறு பேரை போலீசார் கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவத்தின் பின்னணியில் வேறுயாருக்காவதுதொடர்புஉண்டா? என்ற கோணத்திலும் விசாரணை நடந்து வருகிறது.

இந்த நிலையில் தற்போது கைதாகி உள்ள அதிகாரிகள் ரமேஷ், செந்தில்குமார் ஆகிய இருவரும் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர். இதற்கான உத்தரவை நுகர்வோர் வாணிப கழக மேலாளர் பரிந்துரையின் பெயரில் இயக்குனர்பிறப்பித்துள்ளார்.போலீஸ் விசாரணையில் கைப்பற்றப்பட்ட அரிசி , கோதுமை மூடைகள் நாகர்கோவில் அருகே உள்ள பெரிய காடு பகுதியில் உள்ள ரேஷன் கடைக்கு செல்ல வேண்டியவை என தெரிய வந்தது. இந்த கடையின் பெயரில் கூடுதலாக அரிசி மூடைகள் கோதுமை மூடைகளை ஒதுக்கீடு செய்து பின்னர் அவற்றை தென்னந் தோப்பில் பதுக்கி வைத்து விற்பனை செய்ய முயன்றதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேலும் பலரிடம் விசாரணை நடைபெற்று வருகிறது.

அருமனை அருகே

# தஞ்சாவூர் பெரிய கோவில் அகலையில் தூய்மை பணி: மாவட்ட கலெக்டர் ஆய்வு



தஞ்சாவூர் மே 25

தஞ்சாவூர் பெரிய கோவில் அகழிகள் தூய்மைப்பணி நடைபெறுவதை கலெக்டர் பிரியங்கா பங்கஜம் நேரில் ஆய்வு மேற்கொண்டார்

தமிழ்நாடு அரசு நீர்வளத்துறை பராமரிப்பு நிதி உதவியுடன் நீர் நிலைகள் பாதுகாக்கவும், அவசர கால பேரிடர் மீட்பு பணிகளை மேலும் துரிதப்படுத்தவும், ரூபாய் 3.50 கோடியில்ஏழு புதிய பொக்லை ன் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

இந்த எந்திரங்கள் மூலம் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஏரிகள், குளங்கள், கால்வாய்கள், வாய்க்கால்கள் மற்றும் நீர் வழித்தடங்களில் தூர்வாருதல், கருவேலை மரங்கள் அகற்றுதல், முள் மற்றும் புதர்களை நீக்குதல் போன்ற பணிகளும், பேரிடர்கால அவசரமீட்பு பணிகளும் மேற் கொள்ளப்பட உள்ளன.

அதன் அடிப்படையில் தஞ்சாவூர் பெரிய கோயில் மற்றும் மாநகரை சுற்றியுள்ள அகழி நீர்வழி பாதையில் காணப்படும் கருவேல மரங்கள் முட்புதர்கள், ஆகாய தாமரை செடிகள் அகற்றும் பணி கடந்த 16ஆம் தேதி தொடங்கியது இதற்கிடையில்தஞ்சாவூர் பெரிய கோவில் அகலியில் தூய்மை பணி நடைபெறுவதை கலெக்டர் பிரியங்கா பங்கஜம் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்

அப்போது அவர் கூறும் போது தஞ்சாவூர் பெரிய கோவிலின் பின்புற மேற்கு பகுதியில் சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரம் அகளி தூய்மைப்படுத்தப்பட்டுள்ளது தொடர்ந்து பெரிய கோவிலில் பின்புற பகுதிகளில் தூய்மை பணியை நடைபெற்று வருகிறது

தமிழ்நாடு அரசு நிதியின் மூலம் வாங்கப்பட்ட பொக்குளின் இயந்திரங்களின் டீசல் டிரைவர் ஊதியம் பராமரிப்பு மற்றும் போக்குவரத்து உள்ளிட்ட செயல்பாட்டு செலவுக்காக பெரிய நிறுவனங்களின் சமூக பொறுப்பு நீதி நன்கொடையாளர்கள் பொதுமக்கள் பங்களிப்புடன் இந்த நீர் வழி மீட்பு பணி சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்றார்

ஆய்வின் போது ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் பால கணேஷ் இந்திய தொல்லியல் துறை உதவி பொறியாளர் சரவணன், உமேஷ் மற்றும் பலர் உடன் இருந்தனர்



அருமனை அருகே

# ஆட்டோ, பைக் மோதல்; உயிருக்கு போராடிய ஓட்டுனரை மீட்ட பொதுமக்கள்

மார்த்தாண்டம், மே.25

மார்த்தாண்டம் அருகே மேல்புறம் அருமனை சாலையில் மளிகைகடை பொருட்களை ஏற்றிக்கொண்டு ஆட்டோ ஒன்று நேற்று சென்று கொண்டிருந்தது. ஆட்டோ உத்தரங்கோடு சந்திப்பில் செல்லும் போது மஞ்சலுமூடு பகுதியில் இருந்து இருசக்கர வாகனத்தில் வந்த நபர் திடீரென சாலையை கடக்க முயன்றார். அப்போது எதிரில் ஆட்டோ வருவதை தெரியாமல் சாலையை கடக்க முயன்ற போது ஆட்டோ இருசக்கர வாகனம் மீது மோதி தலைக்குப்புற கவிழ்ந்து விபத்திற்குள்ளானது.

இதில் பைக்கில் சென்றவர் தூக்கி வீசப்பட்ட நிலையில், ஆட்டோ ஓட்டுனர் ஆட்டோவின் அடியில் சிக்கிக் கொண்டார். உயிருக்கு போராடிய அவரை பின்னால் வாகனத்தில் வந்தவர்கள் மற்றும் அந்த பகுதியை சேர்ந்தவர்கள் ஆட்டோவின் அடியில் சிக்கிய ஓட்டுநரை மீட்டனர்.

பைக்கை ஓட்டி வந்தவர் தலைக்கவசம் அணிந்திருந்ததால் அதிர்ஷ்டவசமாக லேசான காயங்களுடன் உயிர் தப்பினார். இதையடுத்து இருவரையும் மார்த்தாண்டம் பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அருமனை போலீசார் வழக்கு பதிவு செய்தனர். இந்த விபத்தின் சிசிடிவி காட்சிகள் தற்போது வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

தஞ்சாவூரில்

# பச்சை பயிறு உளுந்து கொள்முதல்



தஞ்சாவூர் மே 25

தஞ்சாவூர் மாவட்டத்தில் பச்சை பயிறு ,உளுந்து கொள்முதல் செய்யப்படுகிறது என மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் தெரிவித்துள்ளார் இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பது :


வேளாண் உற்பத்தியை பெருக்கி விவசாயிகளின் வருமானத்தை உயர்த்த தமிழ்நாடு அரசு பல்வேறு முயற்சிகள் மேற் கொள்கிறது. அதன் ஒரு பகுதியாக நிகழாண்டு ராபி பருவத்தில் பயிறு வகைகள் சாகுபடி செய்யும் விவசா யிகளின் நலனை பாதுகாக்கும் நோக்கத்தில் மத்திய அரசு அறிவி த்த குறைந்தபட்ச ஆதரவு விலை யில் பச்சை பயிறு ,உளுந்து கொள் முதல் செய்ய தமிழ்நாடு அரசு நடவடிக்கை மேற் கொண்டுள்ளது

நிகழாண்டுவேளாண்விற்பனைமற்றும்வேளாண் வணிகத்துறை க்குட்பட்ட தஞ்சாவூர் விற்பனை குழுவின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் தஞ்சாவூர், கும்பகோணம், பாபநாசம், ஒரத்தநாடு ஆகிய ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் மூலமாக பச்சை பயிறு 35 டன்னும் உளுந்து 4000 டன்னும் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது

பச்சைப்பயிறு ,உளுந்து விளை பொருளுக்கு நிர்ணயிக்கப்பட்ட சராசரி தரத்தில் இருக்கும் வண்ணம் நன்கு சுத்தம் செய்து, ஈரப்பதம் 12சதவீதத்திற்குள் இருக்குமாறு நன்கு உலர வைத்து அயல் பொருள்கள் கலைப்பின்றி விவசாயிகள் கொண்டு வர வேண்டும்

இவ்வாறு நன்கு உலர வைக்கப் பட்ட தரமான பச்சை பயிறு கிலோ ஒன்றுக்கு ரூபாய் 87.68 வீதத்திலும், உளுந்து கிலோவுக்கு ரூபாய்78வீத த்திலும் கொள்முதல் செய்யப்படும் பச்சைபயிறு, உளுந்து விளை பொருளுக்கான கிரைய தொகை யை விவசாயிகள் வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும்

மாவட்டத்தில் மே 11 முதல் ஜூலை 9 வரை 60 நாட்களுக்கு பச்சைபயிறு கொள்முதல் செய்யப்பட உள்ளது. இத்திட்டத்தின் மூலம் பயன் பெற விரும்பும் விவசாயிகள்தங்களது சிட்டா, அடங்கள், ஆதார் அட்டை ,வங்கி சேமிப்பு கணக்கு புத்தக நகல் ஆகிய ஆவணங்களு டன் தஞ்சாவூர் ,கும்பகோணம், பாபநாசம், ஒரத்தநாடு ஆகிய ஒழுங்குமுறை விற்பனை கூட்டங்க ளை அணுகி பதிவு செய்து தங்கள து விளைபொருள்களை விற்பனை செய்து பயனடையலாம்.



மீண்டும் மாவட்ட செயலாளராக தொடருவதாக க.செல்வராஜ் அறிவிப்பு:

# பெரியார், அண்ணா சிலைக்கு தொண்டர்களுடன் மாலை அணிவித்து மரியாதை

திருப்பூர், மே. 25:

திருப்பூர் மத்திய மாவட்ட திமுக செயலாளர் , முன்னாள் எம்.எல்.ஏ க.செல்வராஜ் திமுகவில் இருந்து விலக போவதாக அறிவித்திருந்தார். தலைமையின் அறிவுறுத்தலை ஏற்று, மீண்டும் மாவட்ட செயலாளராக தொடர்வதாக அறிவிப்பை வெளியிட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து, நேற்று திருப்பூர் ரயில் நிலையம் முன்பாக அமைந்துள்ள தந்தை பெரியார் மற்றும் பேரறிஞர் அண்ணா ஆகியோரின் சிலைகளுக்கு, கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுடன் வருகை தந்த செல்வராஜ் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அதனைத் தொடர்ந்து, திருப்பூர் ராஜா ராவ் வீதியில் உள்ள மத்திய மாவட்ட திமுக அலுவலகத்திற்குச் சென்று அங்குள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய க.செல்வராஜ், கட்சிப் பொறுப்புகளில் இருந்து விலகுவதாக அறிவித்திருந்தாலும், கலைஞர்காட்டிய வழியில் வேறு எந்தக் கட்சிக்கும் செல்லாமல் திமுகவின் அனுதாபியாகவே நீடிப்பேன். மீண்டும் மு.க.ஸ்டாலின் அவர்களே தமிழகத்தின் முதலமைச்சராக வர வேண்டும் என்று விரும்பினேன்.

இருப்பினும், கழகத் தலைவரின் அன்பான கட்டளையையும், பேச்சையும்தட்ட முடியாமல் மீண்டும் கட்சிப் பணியாற்ற வந்துள்ளேன். கட்சித் தலைவரே நேரடியாகத் தொடர்புகொண்டு பேசுகிறார் என்றால், இதைவிட ஒரு சாதாரணத் தொண்டனுக்கு வேறு என்ன பெருமை வேண்டும்.என்று தெரிவித்தார். இதில் .க.செல்வராஜ் முன்னிலையில் மாற்று கட்சியினர் திமுகவில் இணைந்தனர்.

# தஞ்சாவூர் மாவட்டத்திற்கு மீண்டும் 2 அமைச்சர்கள்



தஞ்சாவூர் மே 25

தஞ்சாவூர் மாவட்டத்திற்கு15 ஆண்டுகளுக்கு பின்னர் மீண்டும் 2 அமைச்சர்கள் கிடைத்துள்ளனர்

தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரு அமைச்சர் மட்டுமே இருந்து வந்த நிலையில் கடந்த 1991ஆம் ஆண்டு ஜெயலலிதா தலைமையிலான அதிமுக ஆட்சியில் எஸ் டி சோமசுந் தரம் (தஞ்சாவூர் )வருவாய்த்துறை அமைச்சராகவும், அழகு.திருநாவுக்கரசு(ஒரத்தநாடு ) உள்ளாட்சித் துறை அமைச்சராகவும் இருந்தனர்

இதன் பின்னர் 20062011 ஆம் ஆண்டுகளில் திமுக ஆட்சியில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கோ.சி மணி,(கும்பகோணம்)வணிகவரித்துறைஅமைச்சர் சி.நா.மீ . உபயதுல்லா ( தஞ்சாவூர்) ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

மேலும் மத்திய நிதித் துறை இணை அமைச்சராக எஸ் எஸ் பழனி மாணிக்கம் என மொத்தம் 3 பேர் ஒரே நேரத்தில் அமைச்சர் களாக இருந்தனர்

இதை யடுத்து 2011-2016அதிமுக ஆட்சியிலும் 2021 திமுக ஆட்சியி லும் ஒரு அமைச்சர் மட்டுமே இருந்தனர் தற்போது த வேக ஆட்சியில் தஞ்சாவூர் மாவட்டத்தி ற்கு 15 ஆண்டு 7 களுக்குப் பிறகு மீண்டும் 2 அமைச்சர்கள் கிடைத்துள்ளனர். கும்பகோணம் தொகுதியில் தவெ க சார்பில் வெற்றி பெற்ற ர.வினோத் வேளாண் துறை அமைச்சராக பொறுப்பேற்றார் இதைத்தொடர்ந்து பாபநாசம் தொகுதியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் வெற்றி பெற்ற ஏ எம் ஷாஜகான் சிறுபான் மை துறை அமைச்சராக பொறுப் பேற்றார்

பாபநாசம்தொகுதியில் ஏற்கன வே 2016 இல் அதிமுக ஆட்சியில் இராதுணைக்கண்ணு வேளாண் துறை அமைச்சராக நியமிக்கப் பட்டார் இவர் 2020 இல் கொரோனா தொற்றால் காலமானார்

இவருக்கு அடுத்து பாபநாசம் தொகுதியில் ஷாஜகான் அமைச் சராக பொறுப்பேற்றதன் மூலம் ஏறத்தாழ 6 ஆண்டுகளுக்குப் பிறகு அத்தொகுதிக்கு அமைச்சர் அந்த ஸ்து கிடைத்துள்ளது

தஞ்சாவூர் மாவட்டத்திற்கு 15 ஆண்டுக்கு பிறகு மீண்டும் 2 அமைச்சர்கள் கிடைத்துள்ள நிலையில் மக்களிடையே எதிர்பார்ப்புகளும் மேலோங்கி உள்ளன.



திருச்சியில்

# இலால்குடி கழக மாவட்டம் நடத்தும் திராவிடர் கழகம் பெரியாரியல் பயிற்சிப் பட்டறை

இலால்குடி, மே 24

இலால்குடி கழக மாவட்டம் திராவிடர் கழகம் நடத்தம் பெரியாரியல் பயிற்சிப் பட்டறை 24.05.2016 ஞாயிற்றுக்கிழமை (ஒருநாள்) கீழவாளாடி பெரியார பெருந்தொண்டர் பெ.சங்கப்பிள்ளை அன்பகத்தில் எழுச்சியோடு தொடங்கியது.

இவால்குடி மாவட்ட கழகத் தலைவர் வீ.அன்புராஜா தலைமை ஏற்று உரையாற்றினார்.

மாவட்ட காப்பாளர் ப.ஆல்பர்ட் மாநில இளைஞரணிச் செயலானர் நாத்திகபொன்முடி, மாவட்ட பகுத்தறி வானர் கழக துணைத் தலைவர் பாபு ராஜ். மாவட்ட துணைத் தலைவர்திருநாவுக்கரசு, மாவட்டதுணை+ செயலாளர்சித்தார்த்தன், இலால்குடி ஒன்றியத் தலைவர் பிச்சைமணி ஆாரே் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட பகுத்தறிவாளர் கழக துணைச் செயலாளர் தலைமை ஆசிரியர் மு.செல்வி தொடங்கி வைத்து உரையாற்றினார்

மாவட்ட மாணவர்கழகத்தலைவர் அவனிகோ இளந்திரையன் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார்.

மாநில ஒருங்கிணைப்பாளர் தஞ்சை இராஜெயக்குமார். பயிற்சிப் பட்டறைய நெறிப்படுத்தியும், பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை எடுத்துக் கூறியும் நோக்க உரையாற்றினார்.

தொடாந்து தந்தை பெரியாரில் மாழ்க்கை வரலாறு எனும் தலைப்பில் ஆசிரியர் மா. அழகிரிசாமி முதல் வகுப்பினை தொடங்கினார்.

பார்ப்பனப் பண்பாட்டுப் படை திராவிடர் கழகம் நேற்றுஇன்று நாளை என்ற தலைப்பில் இரு வகுப்புகளாக முனைவர் துரை.சந்திரசேகரன். அவர்களும் சமூக நீதி வரலாறு என்ற தலைப்பில் பேராசிரியர் தம்கினிவாசன்

தந்தை பெரியாரின் பெண் விடுதலை சிந்தனைகள் மற்றும் ஹிந்து ஹிந்துத்துவா, சங்பரிவார் ஆர்எஸ் எஸ் என்ற என்ற இரண்டு தலைப்பில் இரண்டு வகுப்பாக சபிரின்சு என்னாரெசு பெரியார் தமிழர் தலைவர் ஆசிரியா கி.வீரமணி, அவர்களின் சாதனைகள் என்ற தலைப்பில் வி.சி. வில்வமும் வகுப்பெடுக்கின்றனர்.

நிகழ்வில் பொதுக் குழு உறுப்பினர் முத்துசாமி, மாவட்ட பக செயலாளர் இளஞ்சேட் சென்னி, முன்னாள் மாவட்ட தலைவர் சிவசங்கரன் மண்ணச்சநல்லூர் ஒன்றியத் தலைவர் பொ.பெரியசாமி, நகரச் செயலாளர் & பாலச்சந்திரன். ஒன்றிய இளைஞரணி தலைவர் யுவராஜ் கீழவாளாடி மகளிர் அணி தலைவர் வசந்தருமாரி மகளிரணி செயலாளர் வன்னியம் மான், பாடகர் பொற்செழியன் சந்திர சேகரன். மகளிரணி சாந்தி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். பயிற்சிப் பட்டறையில் 50க்கு மேற்பட்ட மாணவர்கள் பயிற்சி பெருகின்றனர்.

# லால்குடி: சுற்றுலா வேன் தடுப்பில் மோதி விபத்து; உயிர்தப்பிய பயணிகள்



லால்குடி, மே. 25

லால்குடி அடுத்த பூவாளூர் பகுதியில் நேற்று (மே 23) மாலை, முப்பது பயணிகளுடன் அரியலூர் நோக்கிச் சென்ற சுற்றுலா வேன், ஓட்டுநரின் கவனக்குறைவால் நெடுஞ்சாலையின் நடுவே உள்ள தடுப்பு கட்டையில் மோதி விபத்துக்குள்ளானது.

அதிர்ஷ்டவசமாக, வேன் உயர் மின் மாற்றியில் மோதாததால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. வேனில் பயணித்த அனைவரும் காயமின்றி உயிர் தப்பினர்.

### நாகர்கோவில் அருகே

# மனைவியை கத்தியால் குத்தி கொன்று விட்டு தற்கொலை செய்து கொண்ட கணவன்




நாகர்கோவில் மே 25

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் அருகே திருப்பதிசாரம் பகுதியில் உள்ள பூங்கா நகரை சேர்ந்த நாகர்கோவில் மாநகராட்சி ஓட்டுநரான செந்தில்குமார் (36) அவரது மனைவி சுமிதா (33) குடும்பத்துடன் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு சஜின் (14) மகன் உள்ளார். இந்நிலையில் கணவன் மனைவி இருவருக்கும் கடந்த இரண்டு வருடங்களாக அடிக்கடி குடும்ப தகராறு ஏற்பட்டு வருவதாக கூறப்படுகிறது. இதனால் அவரது மனைவி சுமிதா கடந்த நான்கு மாதத்துக்கு முன்பு கணவனை விட்டுப் பிரிந்து சுமிதாவின் தாயார் வீட்டிலும் கணவர் மற்றும் அவரது மகன் தனியாக வசித்து வந்துள்ளனர். இந்நிலையில் அவரது மனைவி சுமிதா நேற்று கணவரை சந்திக்க அவரது வீட்டுக்கு சென்றுள்ளனர். அப்போது வீட்டில் இருந்த அவரது மகன் சஜினை நண்பர்களுடன் சென்று விளையாடிவிட்டு வருமாறு அனுப்பி வைத்துள்ளனர். வீட்டைவிட்டு வெளியே சென்ற சுஜின் ஒரு மணி நேரத்திற்கு பிறகு வீட்டிற்கு திரும்பி வந்துள்ளார் அப்போதுதான் அவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. வீட்டில் சஜின் தாய் தந்தையார்தகராறுசெய்ததில்ஆத்திரத்தில் செந்தில்குமார் அவரது மனைவி சுமிதாவைகத்தியால்குத்திகொன்றுவிட்டு அவரும்உயிரைமாய்த்துகொண்டுள்ளார். ரத்த வெள்ளத்தில் கிடந்த தாயைப் பார்த்த அவரது மகன் சஜின் திகைத்துப் போனார். உடனடியாக அவர் உறவினருக்கு தகவல் கொடுக்க உறவினர்களும் அதிர்ச்சி அடைந்தனர். தொடர்ந்து காவல்துறையினருக்கு தகவல் கொடுக்க சம்பவ இடத்திற்கு விரைந்த ஆரல்வாய்மொழி போலீசார் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஆசாரி பள்ளம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து இதுகுறித்து வழக்கு பதிவு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். கணவன் மனைவியை கத்தியால் குத்திக் கொண்டு விட்டு தானும் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# திருச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்த மாணவியின் குடும்பத்தினரை அமைச்சர் நேரில் சந்தித்து ஆறுதல்



புதுக்கோட்டை, மே. 25

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், லெட்சுமணன்பட்டி வருவாய் கிராமம், மணக்குடிபட்டி கிராமத்தை சேர்ந்த திரு.சேட்டு என்ற வீரமணி என்பவரின் மகள் சீதாலட்சுமி என்பவர் திருச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததை தொடர்ந்து, அவரது குடும்பத்தினரை மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் ஜா.முகமது பர்வேஸ், மாவட்ட கலெக்டர் மு.அருணா தலைமையில் நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்து, அவரது சகோதரிக்கு தற்காலிக பணிக்கான பணிநியமன ஆணையினையும், விலையில்லா வீட்டுமனை பட்டாவிற்கான ஆணையினையும் வழங்கினார்கள்.

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், லெட்சுமணன்பட்டி வருவாய் கிராமம், மணக்குடி பட்டி கிராமத்தை சேர்ந்த திரு சேட்டு என்ற வீரமணி என்பவரின் மகள் சீதாலட்சுமி என்பவர் திருச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மூன்றாம் ஆண்டு நர்சிங் படித்து வந்தார். இந்நிலையில் மூக்கில் சதை வளர்ச்சி இருந்ததால் அவ்வப்போது மூச்சுத் திணறல் ஏற்பட்டு வந்துள்ளது இதற்காக திருச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். சிகிச்சை பலனின்றி உயிர் இழந்ததைத் தொடர்ந்து அவரின் குடும்பத்தினரை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் ஜா.முகமது பர்வேஸ், மாவட்ட கலெக்டர் மு.அருணா, தலைமையில் நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்து, அவரது சகோதரிக்கு தற்காலிக பணிக்கான பணிநியமன ஆணையினையும், விலையில்லா வீட்டுமனை பட்டாவிற்கான ஆணையினையும் வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் ப.கோகுல்சிங், வட்டாட்சியர் விஸ்வநாதன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# ஒகேனக்கல் வனப்பகுதியில் இருசக்கர வாகனத்தை யானை மிதித்து சேதம்: வாலிபர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்




பென்னகரம், மே. 25

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் வனப்பகுதி சாலையில் யானை இருசக்கர வாகனத்தை மிதித்து சேதப்படுத்தியதில் வாலிபர் லேசான காயங்களுடன் உயிர் தப்பினார். கோடை வெப்பம் அதிகரித்து வருவதால் ஒகேனக்கல் வனப்பகுதியில் உள்ள யானைகள் தண்ணீர் தேடி அடிக்கடி சாலையை கடந்து செல் கின்றன. இந்நிலையில், பென்னாகரத்தில் இருந்து நாட்றாம்பாளையம் நோக்கி இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த நாட்றாம்பாளையத்தைச் சேர்ந்த சித்தேஷ் என்பவர், வனப்பகுதி சாலையை கடந்து சென்ற யானையை எதிர்பாராத விதமாக பார்த்து அதிர்ச்சியில் நிலைதடுமாறி கீழே விழுந்தார். அப்போது அங்கு வந்த யானை, சாலையில் கிடந்த இருசக்கர வாகனத்தை காலால் மிதித்து சேதப் படுத்திவிட்டு வனப் பகுதிக்குள் சென்றது. யானையை பார்த்து அதிர்ச்சியடைந்த சித்தேஷ், லேசான காயங்களுடன் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். காயமடைந்த அவர் பென்னாகரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இதுகுறித்து வனத்துறையினர் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும், கோடை காலம் என்பதால் வனப்பகுதி சாலையில் செல்லும் வாகன ஓட்டிகள் கவனமுடன் செல்ல வேண்டும் என வனத்துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.



# திருச்சி ஜிஹெசில் பயிற்சி மருத்துவர்கள் அநாகரீகம்

திருச்சி, மே. 25

திருச்சி அரசு மருத்துவமனையில் நோயாளிகள் வார்டிலேயே பயிற்சி மருத்துவர்கள் இருவர் கட்டிப்பிடித்து முத்தம்கொடுத்துஅநாகரீகமாகநடந்துகொண்டவீடியோ ஒன்று வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த வீடியோ திருச்சி பகுதியில் வைரலாக பரவி வரும் நிலையில், உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என நோயாளிகளும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். இது மருத்துவமனையின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் செயல் என பலரும் கருத்து தெரிவித்து வருகின்றனர்.



### துறையூர் அருகே

# கிணற்றில் விழுந்து உயிரிழந்த மூதாட்டி

துறையூர், மே. 25

துறையூர் அருகே உள்ள கங்காணிப்பட்டி கிராமத்தில் வசிக்கும் 78 வயது மூதாட்டி செல்லம்மாள், கண்பார்வை குறைபாடு காரணமாக அப்பகுதியில் உள்ள கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்தார். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த துறையூர் தீயணைப்பு துறையினர் மூதாட்டியின் உடலை மீட்டனர். இந் துயர சம்பவத்தால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

### உலக அமைதிக்காக வேண்டி

# சுசீந்திரம் தாணுமாலய சுவாமி கோவிலில் வேள்வி

சுசீந்திரம், மே. 25

சுசீந்திரம் தாணு மாலைய சுவாமி கோவிலில் நேற்று உலக அமைதி வேண்டி சுவாமிகளுக்கு சிறப்பு அபிஷேக அலங்கார தீபாரதனை நடைபெற்றது பின்பு சீவிலிபிரகார அரங்கம்முன்பு ஸ்ரீசக்கரசகஸ்திரநாம வேள்வி பூஜை நடைபெற்றது இதில் பக்தர்கள் பெருமளவு கலந்து கொண்டனர் சென்ற ஆண்டு இதேபோல உலக அமைதிக்கு வேண்டி ஸ்ரீ சக்கர அகஸ்திய நாம வேள்வி நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது இதில் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி விக்டோரியா கௌரி கலந்து கொண்டார்

# தஞ்சை கூட்டுறவு காலனி நூலகத்தில் 199-வது வாசகர் வட்ட கூட்டம்




தஞ்சாவூர்,மே.25

தஞ்சை மாநகராட்சி கூட்டுறவு காலனி தஞ்சை நகர கிளை நூலகத்தில் 199வது வாசகர் வட்ட கூட்டம் நடந்தது. கூட்டத் திற்கு வாசகர் வட்ட தலை வர் சோமசுந்தர பாரதி தலைமை தாங்கினார். கூட்டுறவு காலனி நூலக நூலகர் ராஜேஸ்வரி வரவேற்றார். மாவட்ட நூலக அலுவலர் தனலெட்சுமி முன்னிலை வகித்தார். கூட்டத்தில் ஆசிரியரும் பேச்சாளருமான சமூக ஆர்வலர் கரந்தை ஜெயக்குமார் சிறப்பு விருந்தின ராக கலந்து கொண்டு "வேலுநாச்சியார் வழித் தடத்தில்" என்ற தலைப் பில் பேசினார். கூட்டத்தில் ஏராளமான நூலக வாசகர் கள் கலந்து கொண்டனர். முடிவில் நூலக வாசகர் வட்ட செயற்குழு உறுப் பினர் பாபு நன்றி கூறினார்.

# ஏரி, குளங்களில் விவசாயம், வீட்டு உபயோகம் மற்றும் மண்பாண்டம் பயன்பாட்டிற்கு மண், வண்டல்மண், களிமண் எடுப்பதற்க்கு விண்ணப்பங்கள்: கலெக்டர் தகவல்

அரியலூர், மே. 25

அரியலூர் மாவட்ட ஏரி/ குளங்களில் விவசாயம், வீட்டு உபயோகம் மற்றும் மண்பாண்டம் பயன்பாட்டிற்கு மண் / வண்டல்மண் / களிமண் எடுப்பதற்க்கு விண்ணப்பங்கள் வரவேற்க்கப்படுகின்றன

அரசாணை எண்.233 தொழிற் (எம்.எம்.சி.2) துறை நாள்: 23.09.2015, அரசாணை எண்.50 தொழிற் (எம்.எம்.சி.1) துறை நாள்:27.04.2017, அரசாணை எண்.14 தொழிற் (எம்.எம்.சி.2) துறை நாள்:12.06.2024, அரசு கடித எண்.590/ எம்.எம்.சி.1/20241 நாள்: 25.06.2017 மற்றும் 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகளின்படி நீர்வளத்துறை மற்றும் ஊரகவளர்ச்சித் துறை கட்டுப்பாட்டில் உள்ள நீர் நிலைகளிலிருந்து விவசாயம், வீட்டு உபயோகம் மற்றும் மண்பாண்டம் பயன்பாட்டிற்கு மண்/ வண்டல் மண்/ களிமண் போன்ற கனிமங்களை பொதுமக்கள்வெட்டி எடுத்து பயனடைய சில நிபந்தனைகளுக்குட்பட்டு விண்ணப்பங்கள் மாவட்ட ஆட்சியரால் வரவேற்கப்படுகிறது.

அரியலூர் மாவட்டத்தில் நீர்வளத்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறையின் பராமரிப்பில் உள்ள தேர்வு செய்யப்பட்ட நீர்நிலைகளிலிருந்து வண்டல் மண் / மண் எடுப்பதற்கு அனுமதி வழங்குவது தொடர்பாக அரியலூர் மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு எண். 5, நாள்: 27.06.2024, அரசிதழ் சிறப்பு வெளியீடு எண். 14,

நாள்: 22.04.2025, அரசிதழ் சிறப்பு வெளியீடு எண். 16, நாள்: 20.05.2025 ஆகியவற்றில் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி அரியலூர் மாவட்டத்தில் நீர்வளத்துறை கட்டுபாட்டிலுள்ள ஏரி/குளங்கள் மற்றும் ஊரக வளர்ச்சி துறை கட்டுபாட்டிலுள்ள ஏரி/குளங்கள் மண் எடுக்க தகுதி வாய்ந்த ஏரி/குளங்களாக கண்டறியப்பெற்று என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

எனவே, தனிநபர் விவசாய பயன்பாடு, மண்பாண்ட தொழில் மற்றும் தனிநபரின் பொது பயன்பாட்டிற்கு, வண்டல் மண்/களிமண்/ மண் எடுக்க விரும்புவோர் அருகிலுள்ள இ.சேவை மையத்தில் என்ற இணைய தளம் வாயிலாக விண்ணப்பம் செய்து அரசிதழில் வெளியிடப்பட்டுள்ள தங்கள் வட்டத்திற்குட்பட்ட ஏரி/குளங்களிலிருந்து விதிமுறைகளுக்குட்பட்டு இலவசமாக மண் எடுத்துச் செல்ல அனுமதி பெற்றுக்கொள்ளலாம் என்ற விபரம் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் நீர்வள ஆதாரத்துறை / ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறைகளின் நிபந்தனைகளுக்குட்பட்டு மற்றும் கனிம சட்ட விதிகளுக்குட்பட்டு மண்/ வண்டல் மண்/ களிமண் எடுக்க வேண்டும். மண்/ வண்டல் மண்/ களிமண் எடுப்பதில் விதி மீறல்கள் ஏதும் கண்டறியப்பட்டால் கனிம விதி சட்டத்தின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்கள், (தனிநபர் விவசாய பயன்பாடு, மண்பாண்ட தொழில் மற்றும் தனிநபரின் பொது பயன்பாட்டிற்கு) வண்டல் மண்/ களிமண்/ மண் எடுப்பது மற்றும் இணைய வழியாக விண்ணப்பிப்பதில் சிரமம் ஏதேனும் ஏற்பட்டால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கும் உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, மற்றும் சம்பந்தபட்ட வருவாய் வட்டாட்சியர் அலுவலம், அரியலூர் அலுவலகத்தில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட கலெக்டர் பொ.இரத்தினசாமி, தெரிவித்துள்ளார்.

# ஓசூர் காவேரி அம்மன் கோயிலில் தீமிதி விழா திரளமான பக்தர்கள் பங்கேற்று வழிபாடு



ஓசூர்,மே.25

ஓசூர் மாநகராட்சிக்குட்பட்ட அலசநத்தம் சாலையில் தோட்டகிரி பகுதியில் காவேரி அம்மன் கோயில் உள்ளது. இந்த கோயிலில் தீமிதிவிழா நடந்தது.

இதையொட்டி தினமும் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் செய்து பூஜைகள் நடந்தது. இதை தொடர்ந்து நேற்று முன்தினம் 21ம் தேதி வியாழக்கிழமை இரவு 10.30 மணி முதல் 12 மணி வரை அம்மனுக்கு அபிஷேகம் நடந்தது. இதையடுத்து நேற்று 22ம் தேதி வெள்ளிக்கிழமை காலை அம்மனுக்கு மஹா கணபதி பூஜை, புண்ணியாஹம், துர்கா ஹோமம், மஹா பூர்ணாஹுர்த்தி மற்றும் மங்களாரத்தி நடத்தி தீர்த்த பிரசாத வினியோகம் நடைபெற்றது.

இதை தொடர்ந்து தீ மிதிக்கும் விழா நடைபெற்றது. இதையொட்டி பக்தர்கள் 101 பால்குடம், மாவிளக்கு எடுத்து மேள தாளங்கள் முழங்க கோயிலை சுற்றி ஊர்வலமாக பெண் பக்தர்கள் வலம் வந்தனர். இதையடுத்து அம்மனுக்கு எருமைமாடு, கோழி மற்றும் ஆடுகள் பலி கொடுக்கப்பட்டது. இதையடுத்து அம்மனை தீயில் இறக்கிய பின்பு பால்குடம் எடுத்த பக்தர்கள் தீயில் இறங்கி நேர்த்தி கடன் செலுத்தி வழிபட்டனர். இதை தொடர்ந்து பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. மேலும் விழாவில் ஆந்திரா, கர்நாடகா, தமிழகம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு காவேரி அம்மனை வழிபட்டனர்.

இந்த கோயில் திருவிழாவில் கோயில் தர்மகர்த்தாக்கள் சீனிவாஸ், இந்திராணி, வைஷ்ணவி, மகேஷ், பஞ்சாயத்து தலைவர் ஆனந்த், சந்திரசேகர், சினிமா டைரக்டர், ராமகிருஷ்ணப்பா, சிவசிதம்பரம், சபாபதி, ,ஜெயராமன், கிருஷ்ண மூர்த்தி, ஆகாஷ் மூர்த்தி, அனு, பாண்டுரங்கன் சலாபதி, மற்றும் கிராம மக்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# சூலூர் பகுதியில் ஏற்பட்ட துயர சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிறுமியின் குடும்பத்தினருக்கு அமைச்சர்கள் நேரில் ஆறுதல்

கோயம்புத்தூர், மே. 25

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் பகுதியில் ஏற்பட்ட துயர சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிறுமியின் குடும்பத்தினருக்கு, போக் குவரத்து துறை அமைச்சர் ஆ.விஜய் தமிழன் பார்த்திபன் மற்றும் பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை அமைச்சர் சம்பத்குமார் ஆகியோர் நேரில் ஆறுதல் தெரிவித்து, ரூ.7 இலட்சத்திற்கான நிவாரண நிதியினை வழங்கினார்கள்.

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் பகுதியில் அண்மையில் ஏற்பட்ட துயர சம்பவத்தில் 10 வயது சிறுமி உயிரிழந்ததை தொடர்ந்து, போக்குவரத்து துறை அமைச்சர் ஆ.விஜய் தமிழன் பார்த்திபன் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சம்பத்குமார் ஆகியோர் சிறுமியின் சொந்த ஊரான, சேலம் மாவட்டம் கொளத்தூர், உக்கம் பருத்திக்காட்டில் சிறுமியின் குடும்பத்தினருக்கு நேரில் சென்று ஆறுதல் தெரிவித்தார்கள்.

மேலும், போக்சோ நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறையின் சார்பில் பாதிக்கப்பட்ட சிறுமியின் குடும்பத்தினருக்கு நிவாரண நிதியாக ரூ.7 இலட்சத்திற்கான காசோலையினை போக்குவரத்து துறை அமைச்சர் ஆ.விஜய் தமிழன் பார்த்திபன் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சம்பத்குமார் ஆகியோர் வழங்கினார்கள்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட கலெக்டர் க.இளம்பகவத் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கௌதம் கோயல் உள்ளிட்ட அலுவலர்கள் உடன் இருந்தனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.